# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS. No. 105/2020 நாள்.31.07.2026**

PW2- திரு.ராஜப்பா , த/பெ. திரு.ராமசாமி

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி ராஜாத்தி எப்படி தெரியும் என்றால் எங்கள் ஊர்க்காரர். எங்கள் ஊர் எந்த ஊர் என்றால் செந்தலை திருவையாறுதாலுக்கா. வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் கள்ளபெரம்பூர், தஞ்சாவூர் தாலுக்கா. சாந்தி என்பவர் யார் என்றால் என் தங்கை. எங்கு வசிக்கிறார் என்றால் கள்ளபெரம்பூர் எல்லைகால் தெரு. சாந்தி நிலத்தை சாகுபடி செய்வதாக சொல்லுகிறேனே அது எங்குள்ளது என்றால் எல்லைகால்தெருவுக்கு வடக்கே உள்ளது. அது தொடர்பான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ராஜாத்தியின் கணவரை எனக்கு எவ்வளவு நாளாக தெரியும் என்றால் ராஜாத்தியை கட்டிகொடுத்ததிலிருந்து இறக்கும் வரை தெரியும். குமார் சொந்த நிலத்திற்கும் என் சகோதரி நிலத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீ . ராஜாத்தியம்மாள் 5ஏக்கர் அனுபவித்து வருகிறார் என்று சொல்லுகிறேனே அது தொடர்பான ஆவணம் என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை. வாதி ராஜாத்தி எங்கே வசிக்கிறார் என்றால் பூதலூர். அவர் வசிக்கும் வீடு சொந்தாவீடா என்றால் ஆமாம். வாதி ராஜாத்தி நான் சொன்னதுபோல் எந்த நிலத்தையும் சாகுபடி செய்யவில்லை என்றும், அவர் எங்கள் ஊரில் பிறந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.07.31 17:28:41 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**